# வரலாற்றில் முதல் பெண்புலி

"அப்ப காயத்திற்கு என்ன சொல்வது?" என்றேன். "உனக்குத் தடி குத்திவிட்டது என்று கூறுகிறேன். எனது காயத்தை யாருக்கும் காட்டமாட்டேன்" என்றாள். அதேமாதிரி மடித்திருந்த சேட் கையை இழுத்து மூடிவிட்டாள். முகாமுக்குப் போய்ச் சேர்ந்தோம். அங்கே இதே மாதிரியே கூறினாள். இருவரும் மோட்டார் சைக்கிளால் வீழ்ந்ததை யாருக்கும் சொல்ல வில்லை. ஒருநாள் எனக்கு எதற்கோ அடித்துவிட்டாள். இருவருமே துரத்துப்பட்டுச் சண்டை செய்ய, பொறுப்பாளர் வந்து விலக்குப் பிடித்துவிட்டு இருவருக்கும் தண்டனை தந்து, "உங்கள் இருவரையும் மேய்க்க எனக்குப் பிறம்பாக ஒரு நாள் வேணும்" எனக்கூறி, "போங்கோ" என்று விட்டார். மாலதி அடித்த கோபத்தில் மோட்டார் சைக்கிளால் வீழ்ந்ததை எமது பொறுப்பாளரிடம் கூறிவிட்டேன். "சொல்லிப் போட்டாய். இஞ்சால வா உனக்கு நல்லாத் தாறன்" என்றாள். இவள் நினைத்ததைச் செய்தே முடிப்பாள். இதனால் அவளின் மோட்டடிக்குப் பயந்து, பொறுப்பாளருக்குப் பின்னாலேயே திரிந்தேன். அன்றிரவு நித்திரையில் வைத்து 'நம்பிக்கைத் துரோகி' எனக்கூறி, எனக்கு அடித்துவிட்டாள். நான் நல்ல நித்திரையில் இருந்ததால் திருப்பி அடிக்காமலேயே படுத்துவிட்டேன்.

ஒருநாள் எங்களுடைய பொறுப்பாளர் எமக்குப் புதிய சயனைட்டுகள் தருவதற்காக, சயனைட்டைக் கறுப்பு நூலால் கட்டிக் கொண்டிருந்தார். நானும் மாலதியும் பொறுப்பாளருக்கு அருகில் இருந்தோம். "நாங்களும் கறுப்பு நூல் கட்டுறம். தாங்கோ" என்றோம். பொறுப்பாளர் "இரண்டு பேரும் ஓரிடத்தில் வந்தால் நன்மை நடக்காது. அநியாயம் தான் நடக்கும். இரண்டு பேரும் சும்மா இருங்கோ" என்றார். கெஞ்சிக் கேட்டதால் எனக்குச் சயனைட்டில் கறுப்பு நூல் கட்ட அனுமதி கிடைத்தது. நான் சயனைட் கழுத்தில் நூலைப் போட்டு இறுக்கிக் கொண்டிருந்தபோது, இவள், "இறுக்காவிடில் கழண்டுவிடும். நல்லா இறுக்கு" என்றாள். நான் இறுக்கிய போது, "இன்னும் இறுக்கி இழு மணி. இறுக்கி இழு மணி" என உற்சாகம் ஊட்டியதால், நான் பலமாக இழுத்தபோது, சயனைட் கழுத்தோடு உடைந்துவிட்டது. எனக்குத் தூள் பறந்ததால் சாதுவான மயக்கம் ஏற்பட்டது. அவளும் உடைந்ததை எடுத்து மணந்தபோது, அவளும் சாதுவான மயக்கமுற்றாள். பொறுப்பாளர் ஏசினார், "அநியாயப்படுவார் செய்கிற வேலைகள் ஒன்றா, இரண்டா.....?"

### கோட்டையிலும் தொலைத் தொடர்பு நிலையத்திலும்

1987 இல் மன்னாரை விட்டு யாழ்ப்பாணம் வந்தோம். யாழ்ப்பாணத்தில் கோட்டையைச் சுற்றி காவற் கடமைகளில் ஈடுபட்டிருந்தோம். இக்காலப் பகுதியில் பீச் றோட்டுப் பக்கமாகக் காவற் கடமையில் நின்றோம். ஒரு நாள் நாங்கள் வேறு பகுதியில் கண்ணிகள் வைக்கும் வேலைகளில் ஈடுபட்டிருந்தோம். மாலதி மட்டுமே காவற் கடமையில் நின்றிருந்தாள். அப்போது எதிர்பாராத விதமாகக் கோட்டையில் இருந்து இராணுவத்தினர் முன்னேறி மாலதியின் காவல் நிலைக்கு முன்னால் வந்துவிட்டனர். மாலதி சிறிது நேரம் தனித்து நின்றே இராணுவத்தினருக்கு எதிராக ரவைகளைப் பொழிந்து தள்ளினாள். சிறிது நேரத்தில் மேஜர் சோதியா அக்காவும், எமது பொறுப்பாளர்களும் சென்று சண்டை செய்தனர். மூன்று, நான்கு பேர்கள் மட்டுமே சண்டை செய்வதைக் கண்ட இராணுவத்தினர் மேலும் முன்னேற முயற்சி செய்தனர். இவ்வேளையில் மேஜர் சோதியா அக்காவின் குப்பி உடைந்து, அவர் மயக்கம் அடைந்ததால் அவரை இருவர் தூக்கிச் சென்றனர். மாலதி தனித்து நின்றே சுட்டுக் கொண்டு நின்றாள். மேஜர் சோதியா அக்காவை பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு சென்றதும், மாலதி ஓடிச் சென்று, நாம் ஏற்கனவே வைத்திருந்த 'பன்றிக்குட்டி மைன்சை' வெடிக்கச் செய்து விட்டாள்.

பெரியதொரு வெடி ஓசையினால் அதிர்ச்சி அடைந்த இராணுவத்தினர், பயத்தின் பீதியால் பின்வாங்கி, கோட்டைக்குச் சென்றுவிட்டனர். பின்னர் "மாலதி ஏன் 'பன்றிக் குட்டியை' அமத்தினாய்" எனக் கேட்கப்பட்ட போது, "ஆமியை எதிர்த்துத் தாக்குவதற்கு எமது ஆட்கள் நிறையப் பேர் இல்லை என்பதை அவன் தெரிந்து விட்டான். இதனால் விரைவாக முன்னேறினான். எங்கடயாட்கள் வருவதற்கிடையில் ஆமி எங்களுடைய நிலைகளுக்கு முன்னேறி விடுவான் என்றதனால், அவனைப் பின் வாங்கச் செய்யவே எங்கேயோ கிடந்த மைன்சை அமத்தி விட்டேன்" என்றாள்.

மாலதி திடீர் என இப்படி ஓர் மாற்று நடவடிக்கையை செய்ததையிட்டு நாம் மகிழ்ச்சி அடைந்தோம். மாலதி எவ்வளவுதான் விளையாட்டுத்தனம் செய்தாலும் அவளுக்குள் வீரமும், அஞ்சாமையும் நிறைந்து காணப்பட்டது. கோட்டையில் இருந்து செல்லடி தொடங்கியதும் வெளிக்கிடப் போறான் என்ற ஊகம் எங்களுக்கு இருக்கும். உடனே நாங்கள் இராணுவத்தை எதிர்ப்பதற்கு, எங்களுக்கு என ஒதுக்கப்பட்ட காவல் நிலைகளுக்கு விரைந்து செல்வோம்.

இந்த விரைவு வேளைகளில், மாலதியே தனது நிலைக்கு முதலில் சென்று விடுவாள். நாம் எல்லாம் செல்லடிக்கு நிலையெடுத்து, நிலையெடுத்துச் செல்வோம். மாலதியோ அப்படியில்லை. முகாமில் இருந்து ஓடத்தொடங்கினால் தனது காவல் நிலையை அடைந்ததும் தான் திரும்பிப் பார்ப்பாள். சிலர் கூறுவார்கள் 'முரட்டு மாலதி' என்று....

மாலதி எந்நேரமும் சேட் கையை உயர்த்தி மடித்துவிட்டு, ஜீன்ஸ் காலை மடித்துக்கொண்டே நிற்பாள். நாங்கள் 'ரகுமான் எடுவை' என்று பகிடி பண்ணினால், அவள் "இல்லை நான் புரூஸ்லீ எடுவைதான் எடுக்கிறன். எப்போதும் கையாலும் காலாலும் சண்டை பிடிக்கத் தயாராக இருக்கிறேன். என்னைக் கண்டால் ஆமி ஓடுவான்" என்று கூறுவாள்.

1987 இன் முற்பகுதியில் கோட்டைப் பக்கத்திலுள்ள தொலைத் தொடர்பு நிலையம் தாக்கப்பட்டது. இத்தாக்குதலில் மாலதி பங்கு கொண்டாள். சண்டை என்றாள் மாலதி துடிப்புடன் நிற்பாள். உலங்குவானூர்தி வருவதையோ, குண்டு வீச்சு விமானம் வருவதையோ, செல் வருவதையோ பார்க்கவும் மாட்டாள். முன்னுக்குச் சென்று ஆமியைச் சுடுவதிலேயே குறியாக நிற்பாள். இதே மாதிரித்தான் தொலைத் தொடர்பு நிலையத் தாக்குதலிலும் ஈடுபட்டாள். ஒரு பெண் போராளி இந் நடவடிக்கையில் காயமடைந்தாள். காயப்பட்டவளைத் தூக்கிச் செல்லும்படி மாலதியிடம் பொறுப்பாளரால் பணிக்கப்பட்ட போது, (இந் நேரம் சண்டை முடிந்து, ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுக் கொண்டிருந்தன), மாலதி செல்ல மறுத்து, "வேறு ஒருவரை அனுப்புங்கள்" என்று கெஞ்சினாள்.

"வேறு யாருமில்லை. சண்டை முடிந்ததுதானே. நீங்கள் கொண்டு போங்கோ" என்றபோது, அவ்விடத்தை விட்டுப் போக விருப்பமின்றி, காயப்பட்ட போராளியைத் தூக்கிச் சென்று, மதிலுக்கு அங்கால் வேறு ஒரு போராளியைக் கூப்பிட்டு, "இவரைக் கொண்டு போகட்டாம் என்று பொறுப்பாளர் சொன்னவர்" எனக்கூறி, காயப்பட்ட போராளியை அவசரமாக ஒப்படைத்து விட்டு மீண்டும் தான் நின்ற இடத்திற்கு விரைந்து ஓடி வந்துவிட்டாள்.

இந்தச் சண்டையின் போது, மாலதியின் உடலில் சில பகுதிகளில் (கை, கால் உட்பட) சிறு, சிறு செல் துண்டுகள் இருந்தன. "மருத்துவமனைக்குச் சென்று பீஸ்களை எடுத்து விட்டு வா" என்ற போது, "போக மாட்டேன்" என்று மறுத்துவிட்டு, புதுப் பிளேட் எடுத்து, தானே தன் உடம்பில் இருந்து செல் துண்டுகளை வெட்டி எடுத்தாள். தன்னைத் தானே கீறும் அளவுக்கு அபாயகரமான துணிவு கொண்டவள்தான் அவள்.

### மாலதியின் குறும்புகள்.

மாலதி, சண்டை செய்வது என்றால் மிகவும் சந்தோசத்தில் துள்ளிக் குதித்துக்கொண்டு நிற்பாள். சண்டைக்கான அறிகுறிகள் எதுவும் தென்பட்டால், உடனேயே மகிழ்ச்சியோடு "ஆமிக்குச் சொல்லியடிப்பேனடி, அடிச்சன் எண்டால் நெற்றி அடிதானடி" என்று பாடிக் கொண்டே நிற்பாள்.

1987 இன் நடுப்பகுதியில் நாங்கள் கோப்பாய்க்கு வந்தோம். கோப்பாயில் இருந்து, ஒவ்வொரு நாள் இரவும் நாவற்குழி இராணுவ முகாமைச் சுற்றிலும் காவற்கடமை நிலைகள் இருந்தன. இதில் நாம் கோப்பாய்ப் பாலத்தில் காவற் கடமையில் ஈடுபட்டிருந்தோம். இரவில் இரண்டு பிரிவாக பிரிந்து படுப்போம். எங்களுக்குக் கிடைத்த இடம் சுடலை. சுடலைக்குள் படுத்திருப்போம். சத்தங்கள் எதுவும் கேட்டால் காவற்கடமையில் நிற்பவர் இன்னும் இரண்டொருவரை எழுப்பிக்கொண்டு, மண் மேட்டால் சென்று, ஆமியின் நடமாட்டத்தை அவதானித்து வருவோம்.



2ம் லெப் மாலதி
(பேதுறு சகாயசீலி)
ஆட்காட்டிவெளி, மன்னார்
பிறப்பு: 4/01/67 வீரச்சாவு: 10/10/87

மாலதி காவற் கடமையில் நிற்கும் போது ஏதாவது சத்தம் கேட்டால், தானே தனியாகச் சென்று எதிரியின் நடமாட்டத்தை அவதானித்து வருவாள். எங்கள் நிலைக்கு முன்னால் தண்ணீர் இருந்தது. தண்ணீர்ச் சத்தம் கேட்கும். இராணுவ முகாமில் அடிக்கடி விளக்குகளை அணைப்பான் ஆமி. அவ்வேளை நாங்கள் உசார் நிலைக்கு வருவோம். காவற் கடமையில் நிற்கும் மாலதி அடிக்கடி எல்லாரையும் எழுப்புவாள். திடுக்குற்று நித்திரையால் எழுப்பி "என்னடி" என்றால், "பேயடி, பேயடி" என்று பயமுறுத்துவாள். "உண்மையாய் நான் கறுப்பாய், வெள்ளையாய் ஆவியைக் கண்டனான்" என்று கூறுவாள். "நேற்று எரிச்ச பொடியின்ர ஆவியடி. இண்டைக்குத்தான் வெளியே போகுதாக்கும்" என்று மேலும் மேலும் எங்களைப் பயமுறுத்துவாள்.

ஒரு நாள், நான் ஒரு சீமெந்து மேடை மேல் படுத்திருந்த போது, மாலதி வந்து என்னை எழுப்பிச் சொன்னாள், "எடியே கெதியாய் எழும்படி. எழுப்படி" என்றாள். அவசரமான எனது ஆயுதத்தையும் எடுத்துக்கொண்டு "ஆமியோ வந்திட்டான்" என்று கேட்ட போது "எடியே நீ படுத்திருந்த இடம் சமாதியடி" என்றாள். எனக்குச் சரியான கோபம். ஏசி விட்டுப் போய்ப் படுத்துவிட்டேன். மாலதியின் இந்தத் தொல்லைகளால் மாலதிக்குக் காவற் கடமை நேரம் போடாமல் விடுவோம். இரண்டு நாளால் சண்டை பிடித்து, காவற்கடமை நேரம் போடச் செய்து விடுவாள்.

காவற் கடமையில் ஈடுபடும் இடத்திற்குச் சென்றதும், "வாடி நித்திரை கொள்ளும் வரை இடம் பார்ப்போம்" என்பாள். "சம்மா ஓரிடத்தில இரடி" என்றால், "எடியே எங்கே எங்கே நிலை எடுத்து அடிபடலாம் என்று இடம் பார்த்தால் தானே ஆமி வந்தால் அட்டகாசமாக அடிபடலாம்" என்பாள். பின்னர் இரண்டு பேரும் கோப்பாய் கிறேசர் அடியில் இருந்து கைதடிப் பாலம் தொங்கல்வரை நடந்து, நடந்து செல்வோம்.

பகலில் எங்களுடைய முகாமில் நிற்போம். பகலில் இரண்டு பேரும் ஒரே சண்டை பிடிப்போம். சற்று நேரத்தில் சமாதானமாகி ஒன்றாக வெளியில் செல்வோம். நான் அடித்து விட்டு ஓடுவேன். அவள் சந்தி என்று பாராமல், கோப்பாய்ச் சந்தியில் துரத்தி வந்து அடித்துவிட்டே திரும்புவாள்.

ஒருநாள் இரண்டு பேரும் துரத்தப்பட்டுக் கொண்டு கோப்பாயில் ஒரு அப்புவின் வாழைத்தோட்டத்திற்குள் சென்றோம். நான் முதலில் சென்று களைத்துப் போய், "அப்பு தண்ணி தாணை" என்று வாங்கிக் குடித்துக் கொண்டிருக்க, இவளும் களைத்துப் போய் வந்தாள். "எனக்கும் தண்ணி தா மணி" என்றாள். நானும் தண்ணீரைக் கொடுத்துவிட்டு "எனக்கு அடிக்காதை மாலதி" என்றேன். அவள் சிரித்துவிட்டு, "வா பேசுக்குப் போவம்" என்றாள்.

கோப்பாய் பாலத்தடியில் அடிக்கடி உலங்குவானூர்தி தாழப் பறக்கும். அந்நேரங்களில் நாம் கிறேசரடிக்கு விரைந்து செல்வோம். இவ்வேளைகளில் மதில்களைப் பாய்ந்து, பாய்ந்து கிறேசரடிக்கு முதலில் செல்வது மாலதிதான். மாலதி மதில் பாய்வதில் சரியான கெட்டிக்காரி. "இந்தா பார் போறன்" என்றால் அடுத்த நிமிடம் மதிலுக்கு அங்கால் நிற்பாள்.

எங்களுக்குக் 'கொக்கக்கோலா குடிக்கக் கூடாது' என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. மாலதிக்கு கொக்கக்கோலா என்றால் சரியான பிரியம். கொக்கக்கோலா குடிக்கக் கூடாது என்று தடை விதித்த இரண்டாம் நாள் மாலதி என்னிடம், "வாடி கூல் பாருக்குப் போய் வருவோம்" என்றாள். எனக்குத் தெரியும், இவள் கூல்பார் சென்றால் கொக்கக்கோலா தான் குடிப்பாள் என்று. நான் "வரவில்லை" என்றேன். "இண்டைக்கு மட்டும் வா" என்றாள். "சரி வா. கொக்கக்கோலா குடிக்கக் கூடாது. வேறு ஏதாவது குடிப்போம்" என்றேன். அந்நேரம் வெளியில் செல்வதென்றால், சாதாரணமானவர்களாகத்தான் உடையணிந்து செல்வோம். கடைக்குள் சென்ற மாலதி இரண்டு பன்ராவுக்கும் இரண்டு கொக்கக்கோலாவுக்கும் சொன்னாள். "ஏன் மாலதி?" என்றேன். சிரித்துக்கொண்டே "பன்ராவை மேசையில் வைத்துவிட்டுக் கொக்கக்கோலாவைக் குடிப்போம்" என்றாள். "என்ன மாலதி விசர்க்கதை கதைக்கிறாய். எங்களையல்லோ கொக்கக்கோலா குடிக்க வேண்டாம் என்றார்கள். குடித்துக் கொண்டிருக்கையில் யாராவது எங்கட ஆட்கள் வந்தால் என்ன செய்யிறது?" என்றேன். "இண்டைக்கு மட்டும் குடிப்போம். இனிமேல் குடிக்கவே வேண்டாமடி" என்றாள். சரியென மேசையில் அமர்ந்தோம். "முதலில் பன்ராவை எடுத்து, அரைவாசியைக் குடித்துவிட்டு மேசையில் வைத்துவிட்டு, பின் கொக்கக்கோலாவைக் குடி" என்றாள். இடையில் எதிர்பாராத விதமாக எமது உறுப்பினர் ஒருவர் வந்தார். நாங்கள் இருவரும்

தொடர்ச்சி 7ம் பக்கம் ....